இருமருங்கிலும் குளிர் தரும் மரங்கள் வைக்கப்படும். அதைப்போல, இச் சாலைகளுக்கு, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடன் கலந்துபேசி, இச்சாலைகளைப் பிற சாலைகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டக் கூடிய அளவுக்கு அந்தச் சாலைகளின் முகப்பிலே ஒரு இலச்சினை பொறிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. து. வரதராஜன்.

**திரு. செ. து. வரதராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பல சாலைகள் அமைக்கின்ற திட்டம் இருந்தாலும், கரும்பு ஆலைகளில் இருக்கின்ற நிதி நெருக்கடியில், நிதி ஒதுக்கீடு செய்து எண்ணற்ற கரும்பு ஆலைகளிலிருந்து இந்தச் சாலைகளை அமைக்காமல் நிலுவையில் இருப்பதால் – அதனைத் துரிதமாகச் செய்து கிராமங்களுக்கு இந்தச் சாலைகளை இணைப்பு செய்ய அரசிடம் திட்டம் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10.40*

**மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்பு அபிவிருத்திச் சாலை என்பது தனியாகப் போடப்படுகின்ற சாலை. இந்தச் சாலைகள், விவசாயிகள் தங்களுடைய விளை பொருள்களை பிரதான சாலைக்குக் கொண்டுவரக்கூடிய சாலைகள் திட்டத்தின்கீழ் போடப்படுகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண். 111, திருமதி கற்பகம் இளங்கோ; மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர்.

***111–***

**காரைக்குடியில் பால் விற்பனை நிலையம் அமைத்தல்:**

*** *20105*–திருமதி கற்பகம் இளங்கோ:**

மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா--

காரைக்குடி நகரத்தில் மெ.மெ. வீதி சந்தைப்பேட்டை சந்திப்பு, கீழஊரணி, முத்துப்பட்டிணம் ஆகிய இடங்களில் பால் விற்பனை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத்துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். காரைக்குடி பால் பண்ணையின் சார்பாக முத்துப்பட்டிணம் அருகில் 15-7-1993 அன்று பாலகம் அமைக்கப்பட்டு பால் விற்பனையாகி

வருகிறது. மற்றும் எம். எம். வீதி சந்தைப்பேட்டை சந்திப்பு, கீழ ஊரணி ஆகிய இடங்களிலும் ஆவின் பாலகங்கள் அமைப்பது குறித்து பரிசீலனையில் உள்ளது.

**திருமதி கற்பகம் இளங்கோ:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது மக்களின் தேவையை உணர்ந்து உடனுக்குடன் அவர்கள் குறைகளைக் களைந்து வரும் நமது மாண்புமிகு இதய தெய்வத்தின் ஆட்சியில் இதுபோன்ற நல்ல பதிலைத் தந்த மாண்புமிகு அமைச்சருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, நான் எனது கேள்வியில் குறிப்பிட்டுள்ள அந்தப் பகுதிகளானது காரைக்குடி நகரத்தில் முக்கியப் பகுதிகளாக இருப்பதோடு மட்டுமல்லாது, அங்கு மக்கள் தொகையும் அதிகமாக இருக்கிற காரணத்தினால் அவர்கள் பால் பாக்கெட்டுகள் பெறுவதென்றால் பல்வேறு இடங்களுக்கு அலைந்து சென்று வாங்கும் அவல நிலை இருக்கிறது. எனவே, நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருகின்ற தைத் திருநாளாம் பொங்கலுக்கு முன்பாக இந்த பால் விற்பனை நிலையங்கள், நான் குறிப்பிட்டுள்ள இடங்களில் அமைத்துத் தருவதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை நிறைவேற்றப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண். 112, திரு. து. மூர்த்தி; மாண்புமிகு தொழில்துறை அமைச்சர்.

**112--**

**சீர்காழியில் சிப்காட் தொழிற்பேட்டை அமைத்தல்:**

***16401–திரு. து. மூர்த்தி:**

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா--

சீர்காழி தொகுதியில், சீர்காழியை மையமாகக் கொண்டு சிப்காட் தொழிற்பேட்டை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. து. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சீர்காழி தொகுதிக்குப் பக்கத்தில் நடிப்பிசைப் புலவர்

TRUTH ALONE TRIUMPHS